யில்லை. கீழேயே மொத்த வியாபாரம் நடைபெறுகிறது. அது மட்டுமல்லாமல் புளி கொள்முதலில் பல முறைகேடுகள் நடைபெறுகின்றன. வேண்டியவர்களுக்கு குறைந்த தொகைக்கு குத்தகை விடப்படுகிறது. ஏலம் விடுவதில்லை. இதனால் ஏற்படுகிற வருவாய் இழப்பையும் மற்ற தவறுகளையும் கண்டிக்கிற வகையில் கண்டிப்பாக இதற்குக் காரணமான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[முற்பகல் 11-20]

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 31-3-87க்குள் ரூ.4,37,000 வழங்கப்பட வேண்டும் என்ற குறியீடு இருக்கிறது. அந்தத் தகவல் வராத காரணத்தால் அந்த விவரங்கள் சேகரிக்கப்படுவதற்கு தாமதம் ஏற்பட்டதன் காரணமாக 10-4-1987க்குள் எல்லா விவரங்களையும் பெற்று கிட்டதட்ட ஐந்து இலட்சம் ரூபாய் அந்த மக்களுக்கு விநியோகம் செய்யும் சூழ்நிலை இருக்கிறது. ஆனால் அங்கேயுள்ள மக்களுக்கு 1985-86 ஆம் ஆண்டில் பல சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன. பங்குத் தொகை கூட ரூபாய் 50,000; அதற்கு வட்டி மானியமாகச் சேர்த்து ரூபாய் 76 ஆயிரம் வழங்கப்படுகிறது.

புளி கொள்முதலில் அங்கே தவறுகள் நடப்பதாகச் சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட தவறுகள் இதுவரை அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படி வருமானால் அரசு கட்டாயம் நடவடிக்கை எடுக்கும். ஆனால் அங்கேயுள்ள மக்களுக்கு, மலையில் சென்று சர்க்கரை மற்ற பொருள்களையும் விநியோகிக்க வேண்டும் என்று சொசைட்டிகள் அமைத்து இவ்வளவு தொகையை அரசு ஒதுக்கீடு செய்து செயல்படுகிறது. அப்படிப்பட்ட தவறுகள் இருக்குமானால் கட்டாயமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் இதுவரையில் எந்தவிதமான தகவலும் அரசு துறையைப் பொறுத்த வரையில் எங்களுக்குக் கிடைக்கவில்லை. ஆகவே இப்படிப்பட்ட தவறுகள் நடந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

4. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு

Dr. K. P. RAMALINGAM: Hon'ble Deputy Speaker, Sir, on behalf of the Chairman of the Committee on Public Accounts, I present the following Reports of the Committee:

1. Forty-eighth Report on the action taken by the Government on the recommendation contained in the Twenty-First Report (Seventh Assembly) of the Committee on Public Accounts (1982-83

on the paragraphs pertaining to Commercial Taxes and Religious Endowments Department in the Report of the Comptroller and Auditor General of India for the year 1977-78 and 1978-79 (Revenue Receipt.)

2. Forty-ninth Report on the further action taken by the Government on the recommendations contained in the First Report of the Committee on public Accounts (1977-78) and Thirteenth Report of the Committee on public Accounts (1980-82) on the Report of the Comptroller and Auditor General of India for the year 1972-73 (Revenue Receipt.)

3. Fiftieth Report on the Excesses over Voted Grants and Charged Appropriation for the year 1982-83.

5. அறிவிப்பு

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

1987–88 ஆம் ஆண்டுக்கான மானிய கோரிக்கைகள் பேரவையில் முன் மொழிவதற்கு ஆளுநரிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது.

MESSAGE

"In pursuance of Article 203, Clause 3 of the Constitution of India, I, Sundarlal Khurana, Governor of Tamil Nadu hereby give my recommendation to the moving in the Tamil Nadu" Legislative Assembly of the demands for grants for the year 1987–88.

6. வரவு-செலவுத் திட்டம் 1987-88 வாக்கெடுப்பு

கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம்

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ''மானியக் கோரிக்கை எண்-4. பொது விற்பனை வரியும் ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 19,65,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்,''